# வடம்



தை-மாசி 2005

விலை ரூ. 20/=

கவிதைக்கான இருதிங்களிதழ்

# வடம்

1

தை-மாசி 2005
விலை ரூ. 20/=

கவிதைகளுக்கான இருதிங்களிதழ்

# விமர்சகனுக்கான பத்து கட்டளைகள்

**I.** தன்னை இலக்கியச் சிகரமென்று நினைத்துக்கொண்டிருக்கும் குட்டிச்சுவரிடம் இமயம் உள்ள திசையை மறந்தும் சுட்டிக்காட்டாதிருப்பாயாக!

**II.** விமர்சனப்பாங்கான முன்னுரைகேட்டு வருகிறவரது மனத்தில் இருப்பது விமர்சனப் பாங்கான சொற்கள்தாம் என்று நம்பாதிருப்பாயாக!

**III.** உண்மைக்குப் பொருந்திவராத எந்தச் சொல்லையும் மனந்துணிந்து பொய்யென்று அடையாளங் காட்டாதிருப்பாயாக!

**IV.** ஒருவருடைய எழுத்தை இன்னொருவர் தன்னுடையதென்று பிரசுரித்தால் அதைக் களவென்று பழியாதிருப்பாயாக!

**V.** ஒருவரது எழுத்தில் இல்லாத மேன்மைகளை எல்லாரும் சொல்லுகையில் அரசரது புதிய ஆடை பற்றி நினைவூட்டாதிருப்பாயாக!

**VI.** ஒருவரது எழுத்தில் இலக்கணப் பிழைகளைக் கண்டால் அவற்றை மொழிவளர்ச்சிக்கான உயரிய பங்களிப்பு என்று போற்ற இயலாதுவிட்டாலும் குற்றங் கூறாதிருப்பாயாக!

**VII.** இழிவான எந்தவொரு சொற்பிரயோகத்தையும் புதிய வாசிப்பென்று புகழ்வதல்லாமல் பிழையான பாவனை என்னாதிருப்பாயாக!

**VIII.** தெளிவீனமான மொழிநடையை உன்னால் விளங்கிக் கொள்ள இயலாதென்று சொல்லி உன்னை அறிவிலி என்று அடையாளங்காட்டாமலிருப்பாயாக!

**IX.** உலகில் எல்லாரும் உனது உண்மையான கருத்துக்களை அறியவே காத்திருப்பதாக எண்ணி ஏமாறாமல் இருப்பாயாக!

**X** பிடிவாதக்காரனென்றும், பிறரை மதியாதவனென்றும், தன்னடக்கமற்றவனென்றும், கர்வி என்றும், கடுமொழி பேசுவோனெனவும், பொறாமை மிக்கவனென்றும், வீண் சர்ச்சைக்காரனென்றும், ஒரு பக்கச் சார்புடையவனென்றும், மூடனென்றும் இன்னும் பலவாறும் எவரும் உன்னை அழைப்பதையிட்டு வருந்துமியல்புடைய வனாக நீ இருந்தால் –

என்றும்
எதையும்
எங்கும்
எக்காரணங் கொண்டும்
விமர்சியாதிருப்பாயாக!

(படைப்பாளிகளைப் பாதுகாக்கப் படைக்கப்பட்ட கடவுளின் ஆணையின் பேரில் வரையப்பட்டது.)

சி. சிவசேகரம்

"எழுத்து ஆன்மாவின் ரத்தம்
கவிதைகள் காலத்தின் உதடுகள்."

வடம்
கவிதைகளுக்கான
இரு திங்களிதழ்

மலர்: 1

இதழ்: 1
தை-மாசி 2005.

**ஆசிரியர் குழு**

பா. மகேந்திரன்
இரா. நெல்சன்
வே. தினகரன்

**ஆலோசனை**

ஜெ. சற்குருநாதன
ம. திலகராஜ

**அட்டை படம்**

வீ. அர்ஜுன்ரோய்

**அச்சிட்டு வெளியிடுவோர்**

"குயில்தோப்பு"
கலை இலக்கிய ஒன்றியம்
காவத்தை.

தொடர்பு முகவரி:
"வடம்",
இல.02, சேர்ச் வீதி,
காவத்தை. (70150)

**தொலைபேசி**

07 77-592872
051 2224716
0776 576033

kuyil thoappu @ yahoo.com

**நேர்காணல்**

சாரல் நாடன்

**பதில்**

எச்.ஜீ. ரசூல்

**கவிதைகள்**

எம்.ஏ.நு..மான்

சி.சிவசேகரம்

மூதூர் கலைமேகம்

குயிலன்

மிஸ்வாக்

கே.ஸ்டாலின்

யூயெல். மப்றூக்

பா.இந்திரன்.

ஜி.சர்மிளா

து.பிரபாஹர்

மயன்- 2

ஆர்த்தி

லறீனா ஏ.ஹக்

சிவலிங்கம் சிவக்குமார்

ஆர்.பிரேமா

யதார்த்தன்

மலைவாசி

ஏ.உம்முல் கைர்

முல்லை அமுதன்

கனிமொழி

சி.சார்ல்ஸ்

பி.சுதர்சினி

ஏ.புனிதகலா

வீ.கணேஸ்

ஆ.சிற்றம்பலம்

# வடம் வருதலின் நோக்கம்.....

எந்த நாட்டு வரலாற்று ஆவணப்படுத்தலிலும் இலக்கிய இதழ்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருக்கின்றன. ஈழத்து இலக்கிய வரலாற்றிற்கும் இது இயைபு. மலையக மக்களின் வரலாற்றுப் பதிவுகளுக்கு, ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய இலக்கியமும், இலக்கிய இதழ்களும், இலக்கிய நூல்கள் என்பனவும் தூண்டுதலாக நின்றிருக்கின்றன. அறுபதுகளில் பிரவகித்த மலையக இலக்கியங்கள் இதற்குச் சான்று. ஈழத்து இலக்கிய பரப்பிற்கு புதியரத்தம் பாய்ச்சிய இவ்வெழுத்துக்களின் நீட்சி எண்பதுகளின் பின் பலவீனமடைந்ததை ஈழத்து தமிழிலக்கியத் தளம் நன்கறியும். இக்காலகட்டத்திற்குப் பின் கணிசமான படைப்பாளிகள் தோன்றியிருப்பினும், அவர்களை அடையாளப்படுத்தவும், வலிமையூட்டவும் உரிய களங்கள் இல்லையென்பது

இறுக்கமான உண்மை. இந்த இருண்மை நிலையிலிருந்து ஓரளவேனும் மீட்சி தரும் நோக்கிலேயே குயில்தோப்பு "வடத்தினை" வெளிக்கொணர்வதினூடாக கவிதைத்துறையில் ஆர்வமுள்ள, பயிற்சிக் களமற்ற படைப்பாளிகள் நிறைந்துள்ள காலகட்டத்தை தன் இயலுமையின் வரம்புவரை பயன்படுத்த முனைந்துள்ளது.

உலகக் கவிதைத்தரம், தேசிய கவிதைத்தரம் என்பவற்றோடு இணைந்து மலையக கவிதைத்தரத்தின் நிலையை படைப்பாளிகளுக்கு உணர்த்தவும், மேலெழுந்து வரவேண்டிய தூரங்களைக் காட்டுவதும் இதன் நோக்கங்களில் பிரதானமானவைகள். இரண்டு மாதங்களுக்கொருமுறை வெளிவரவிருக்கும் இவ்விதழுக்கான ஆக்கங்கள் தொடர்ச்சியாக வெகுசன ஊடகங்களினூடாக கோரப்பட்ட பின்னரும் மிகக்குறைவான படைப்புக்களே கரம் சேர்ந்தன. இதுவரைக் கிடைத்த படைப்புக்களைக் கொண்டே இவ்விதழ் வெளிவருகிறது. எனவே அடுத்தடுத்த இதழ்களுக்கான ஆக்கங்களை வாசகரிடம் ஆவலுடன் குயில்தோப்பு எதிர்ப்பார்க்கிறது. அத்தோடு இதழ் தொடர்பான விமர்சனங்களையும் ஏற்று பிரசுரிக்க காத்திருக்கிறது. அத்தோடு இதழ் தொடர் பான விமர்சனங்களையும் ஏற்று பிரசுரிக்க காத்திருக்கிறது.

இதிலுள்ள படைப்புக்கள் சில அடர்த்தி குறைந்தவை என்பதில் எமக்கும் ஏற்பு இருக்கிறது. வளர்நிலை படைப்பாளிகளை அதிகமாய் உள்வாங்கும் நோக்கிருப்பதால் இந்நிலை தொடர்ந்து வரும் என்பதினை முதலிலேயே சொல்லிவைக்கிறோம். என்றபோதும் ஒவ்வொரு இதழுக்கும் சாதகமான மாற்றங்களை கொண்டவற்றையே "வடம்" உள்வாங்கும். இவ்விதழில் அறிமுகமாகும் புதிய கவிஞர்கள் சிலர் நம்பிக்கை தருகின்றார்கள்.

எழுத்துலகினுக்கு எழுந்துவர முனையும் இளையவரை இயங்குபடையாககொண்டு வெளிவரும் இவ்விதழின் பிறப்புக்கு சில எழுத்துலக கனவான்களின் ஆலோசனையும், ஆசிர்வாதமும் கிடைத்தது பெரும்மகிழ்ச்சி. மேலும், மலையகத்திலிருந்து வெளிவரும் இலக்கிய இதழ்கள், இதரபிரதேசத்து இலக்கிய இதழ்கள், எங்களை தூசுதட்டும் எழுத்துலக மூத்தபடைப்பாளிகள், ஆகியோரின் ஒத்துழைப்பை எதிர்ப்பார்த்தே இம்முயற்சியில் இறங்கியுள்ளோம். துணைபுரிவார்கள் எனும் நம்பிக்கையிருக்கிறது. இவ்விதழின் வருகைக்கு பொருளாதார உதவி நல்கிய நல்லுள்ளங்ளையும், ஆலோசனை வழங்கிய பெரியோர்களையும், விளம்பர உதவி புரிந்த ஊடகங்களையும் நன்றியோடு நினைவு கூறுகின்றோம்.

**"வடம்" அமிழ்த்தப்பட்ட வர்க்கத்திற்காக உழைக்கும்**

ஆசிரியர் குழு

# இருத்தலின் அவஸ்தை

என் இருப்பு
அவசியமில்லாதொன்றுதான்
இந்தப் பெருசு
இன்னும் போய்த் தொலையலையே
என்ற என்
சுற்றத்தாரின் ஏக்கத்தின் முன்...

அவர்கள் எங்ஙனம் அறிவார்கள்
கசிப்பில் கல்லீரல்
கரைக்கும் மூத்தவன்
அதிகாரத் தலைமைகளின்
கால் நக்கும்
என் இளையவன்

காதல் மயக்கத்தில்
நிதர்சன வாழ்வு மறந்து
வாழ்க்கையை சினிமாவில்
தேடி ஊர்சுற்றித் திரியும்
மூத்தவன் மகன்

நாகரீக கன்றாவிக்குள்
விழுந்து, நாறி
பள்ளிச்சிறாரை விழுங்கும்
இளைய பேரன்..... இவர்களால்
எனக்குள் நாள்தோறும்
நிகழும் மரணம் பற்றி?

சொற்ப சம்பளத்தில்
சந்தா திருட்டு கழிய
மீதம் கொண்டு - எம்
வயிறு நனைக்கும்
என் மகளுக்காகவும்
குருதிவற்றி, உறுதிவற்றி
கூன்விழுந்த போதிலும்
கண்டவுடன் ஓடிவந்து
கால் சுற்றிக்கொள்ளும்
என்பேத்திக்காகவும்
இன்னும் என் மனைவியின்
நினைவுகளுக்காகவும்
மீளவும், மீளவும் துளிர்க்கும் என்னுயிர்
இந்த தேயிலைச்செடிகள் போல....

குயிலன்

## மனு

யாருடைய சோறு என
சாதி சங்கத்துக்கு மனுவனுப்பி
விடை வந்தப்பின் பசி தீர்ந்தது
நிலாச் சோறு தாண்டி,
நிலவில் சோறு
சாப்பிடும் போதும்.

டிம்புள்ள த.வீ.

---

# வாக்கிழத்தல்

சத்தியங்களால் அவர்கள்
எம்மைச் சமரசம் செய்தது
ஆறு கோடைகளுக்கு முன்னதான
ஆவணி மாதமொன்றின்
இளவெயில் பொழுதில்தான்
வெந்து கிடந்த எங்கள் ரணங்களை
அவர்கள முன் விரித்து வைத்தோம்

வசிய வார்த்தைகளால்
வருடிக் கொடுத்தார்கள
எங்கள் வாழ்வுக்கும் வயிற்றுக்குமாய்
தங்கள் ஊண் உறக்கம் துறப்பதாக
மீண்டும்
சத்தியங்களால் அவர்கள்
எம்மைச் சம்மதிக்கச் செய்தார்கள்

எல்லோரும் ஒருமுறை கரகோசித்தோம்
நண்பன் தேநீர் பகிர
எங்கள் விடியலை நினைத்து
சுவைத்தோம்
அவர்களுக்காகப் பிரார்த்தித்து
வழியனுப்பி வைத்தோம்
அவர்களின் பெயரில்
வாக்குகளை இறைத்தோம்

இன்றைய இரவும் என்றும் போலவே
கஞ்சிதான் , உணவு
நேற்று வாப்பா
குண்டடிபட்டு மௌத்தாகி போனதாய்
கய்யாம் அழுதான்
தூக்கம் மறந்த நடுநிசிப்பொழுதில்
அவர்களை நினைத்தோம்
வெள்ளிகளை எண்ணினோம்
அழுதோம்.

ஆறு கோடைகள் கடந்துபோன
மெல்லிய மழைமாத
ஒரு புரட்டாதித் திங்களில்
மீண்டும் அவர்கள்
எங்களூர் வந்தார்கள்

திரும்பிப் பார்த்த போது
ஆறு கடல் குளங்களெல்லாம்
தூர்ந்து போய்
காய்ந்து கிடந்தன
கய்யாம் சொன்னான்
இதயத்தை தொலைத்தவர்களின்
சத்தியத்தை
இனி
நம்பக் கூடாது என்று!

**யூஎெல். மப்றூக்**

---

# விதைப்பு

பசுமை செழித்த போர்வையில்
எழில் சிந்திக் கிடந்த மண்
எல்லாத் தெருக்களிலும்
அடர்த்தியுறு மதத்தின் கோட்டைகள்
உள்ளே சென்றவன்
பிரசங்க விஷத்தெளிப்பில்
வீக்கமிகு வெறியனாக வெளிவந்தவாறு...

ஆகா....!
அன்பு சொன்னதான கடவுளின் ஏடுகள்
அராஜகம் புரிதலின் மேற்கோளாகி
இன்னுமுயர்ந்து
துவேசத்தின் ஆராதனையாகி
மனித நேயங்கள்
மதக்குறி பார்த்துவிழும் கோரங்களாகின

இப்போதோ! தந்தங்களைவிட
மதங்களை இழந்தன யானைகள்
மனிதனதை பறித்திட்டதால்

ஏ மனிதா!
ஆன்மீக வேர் பற்றி வாழ்
வெற்று வேதாந்தச் செருக்கில்
மனிதம் பழியிட்ட மதமிருகமாய்
வாழ்தலை தொலை!
உயிரென்ற பொதுமைக்குள்
நேசக் கிரணத்தை விதை.

**காவத்தையூர்
இந்திரன்**

---

படிமங்கள் எத்துணை அழகு பெற்றிருந்தாலும் உணர்ச்சிச் சலனம் அவற்றில் குடியிராவிட்டால் அவற்றுக்குப் பொருளும் மகத்துவமும் இல்லை.

# இன்னும் எத்தனை காலத்திற்கு ?

சிதைந்த கோபுரங்களாகவே பிறந்து
சீர்திருத்தப்படாத வாழ்வுடனும்
சிதைந்த கனவுகளுடனும்
இன்னும் எத்தனை காலத்திற்கு?

சுழன்று சுழன்று செயலற்றுப்போன
மணிக்கட்டுடனும்
சுரந்து சுரந்து வற்றிப்போன
வியர்வைச் சுரப்பியுடனும்
தேயிலைச் செடிக்குள்ளேயே
ஆயுளைக் கழிப்பது
இன்னும் எத்தனைக் காலத்திற்கு?

செவ்வாய்க் கிரகம் வரை சென்றுவிட்ட
மனிதக் கூட்டத்தினிடையே
பிரட்டுக் களம் சென்று
இருட்டுத் தவம் செய்வது
இன்னும் எத்தனைக் காலத்திற்கு?

இடர்தனில் இரண்டறக் கலந்து
சுடர்விடக் குமுறுகின்ற அறிவுடனும்
படர்ந்துவிட்ட அறியாமையை
தகர்த்தெறியா மடைமையுடனும்
சிதைந்த கோபுரங்களாகவே
இன்னும் எத்தனை காலத்திற்கு?

**G. சர்மிளா**
**கெட்டபுலா த.ம.வி**

---

அக்கினிப் பிரவேசம்
என் சத்தியத்தை
நிரூபிக்கவல்ல
நீ தொட்ட
கறைகளைக் கழுவ.

**கனிமொழி**

அடுத்த இதழில் இருந்து கவிதைக்கான கேள்வி பதில், வாசகர் கருத்து என்பன இடம்பெறவிருக்கின்றன. கவிதைகள், கவிதைகள் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகள் என்பனவும் வரவேற்கப்படுகின்றன.

# நிமிர்ந்த வாழ்வு

என்னை நீ மறக்கவில்லை
கிரமமாக கடிதம் போடுகிறாய்
அம்மனிடம் எனக்காக பிரார்த்திக்கிறாய்
சரையில் பிரசாதம் அனுப்புகிறாய்
நோய்கள் பற்றி எழுதுகிறாய்
காட்டுப் பிரதேசம், கவனம் என்கிறாய்
உணவுப் பிரச்சினை பற்றி வினவுகிறாய்
மருந்துத் தட்டுப்பாடு இருக்கிறதா ?
வினா எழுப்புகிறாய்.
அங்கு எல்லாமே சுப்பர்தான்
உன் கடிதங்கள் கோடி காட்டுகின்றன.
கோல்பேசில் நீ கைது செய்யப்பட்டதும்,
லோயரால் வெளியே வந்ததும்,
உன்னவர் இருக்கும் போதே,
குங்குமம் இடாமல் நீ திரிவதும்,
வீட்டில், பெயர்பலகையை எடுத்து விட்டதும்,
எனக்குத் தெரியும்
உன்னுடன் தங்க வந்த அக்காவை
டீ கொடுத்து விடையளித்ததையும்
எனக்கு மறைத்து விட்டாய்.
உன் வசதி போல் நீ வாழ்ந்துகொள்
ஒன்று மட்டும் செய்
கடிதங்களில் இழையோடும் அந்த பச்சாதாபத்தை
விலக்கி விடு!
நாம் நிமிர்ந்தே இங்கே இருக்கிறோம்.

**சு. மகேந்திரன் / மயன்-2**

---

# தர்மம்

விகாரையில் முருகன்
பள்ளியில் ஏசு
கோவிலில் புத்தன்
தேவாலயத்தில் அல்லா
குழப்பமில்லை
சமத்துவம் சொன்னது
சுனாமி

**சுபா**
**முந்தல்**

# நாயகர் வருக

நாயகர் வருக!
இளைய மகளின்
தலையணையில்
நீங்கள் பிருஷ்டம்
அழுத்தி அமர்க!

போலியால் விரிந்த
இதழ்களால் மட்டும் - எங்கள்
நலம் விசாரிக்குக!

நாங்கள் வழங்கும்
மிகை இனிப்புத் தேனீருக்கு
நிகராய் - இனிய
மிக இனிய பொய்கள் சொல்க!
ஆகா!
கேட்டுக் கேட்டுச்
சலித்தவையெனினும்
தேவாமிர்தம் தேவாமிர்தம்தான்.

படிப்பு சுமந்து, பசி சுமந்து
களைப்பேகி, குடையற்று,
வெயிலில் நடந்து வந்த
களைப்பில் ஆடைமாற்றாமல்
கிழிந்த பாயில் சரிந்துறங்கும்
பள்ளி மகளை விழிகளால்
நக்கி, மேய்க!

யுவதிகளின்
துயிலுகைக்கோல ரசிப்பு
உயர்ந்த ரக மானுடத்திற்குரியது
மேலும் உங்கள்
பொன்னான நேரத்தை
விரயம் செய்து பொய்யுரைக்க.
துயில்வது தெரிந்தும்
விடைபெற இறுதியாய்
எட்டிப்பார்க்குக!
எச்சில் துடைக்குக!

பொய்யுரைக்கக் கூடாது
எங்கள் செங்குருதி
பருகி,பருகி
உங்களுடன் மேலும் பருந்து,
மினுக்கேறி[illegible] உள்ளது

மீண்டும் ஒரு வெள்ளம் வந்து
அகதியாவோம் - காலங்கடந்து
அப்போது(ம்) மீளவும் வருக!
மண்டேலாவும்,
காஸ்ரோவும்
வாழும் காலத்தில்தான்
நம் வாழ்கை
வாழ்ந்து கொண்டிருக்கிறது.

**வே.தினகரன்**
**பத்தனை**

---

## எழுக பெண்மை!

எழுவேன் பேரலையாய்!
வெடித்துக் கிளம்பும்
பூ கம்ப அதிர்வெழுப்புவேன்!
சுற்றி சுழன்று
ஆங்காரமாய் ஒரு புயலாவேன்.
சமூகச் சாக்கடையை
அடித்துக் கொண்டோடும்
ஊழிப் பிரளயமாவேன
அழிப்பதற்கன்று - எம் மாந்தர்
விழிப்பதற்காய்!
வாழ்வேன் துணிவாய் - நெருங்கிவிடும்
மரணத்தின்
கைவிரல்கள் எனைத்
தொட்டுவிடும் வரை
வாழ்வேன வாழ்வைத்
துய்ப்பேன் நான்.
காற்றாய்ப் பறப்பேன
சிகரங்கள் தொடுவேன்
எனக்காய் வாழ்வேன்
இறுதிவரை!

**லறீனா ஏ.ஹக்**

---

புதுக்கவிதைகள் விம்மி விளைவதற்கு நவநவமான சொல்லாக்கங்களின் புதுப்பாய்ச்சல் ஒரு காரணம்.

# தமிழ் கைதி பேசுகிறேன்

கந்தல்களையே
சொந்தங்களாகக்கொண்டு
காலங்கழிக்கும்
சொந்த நாட்டின்
பந்தம் நான் எனக்கூறமுடியாது
தவிக்கும்
தமிழக் கைதி பேசுகிறேன்!

வளர்ந்தது கருவறைக்குள் தான்
வளரப்போவது சிறையறைக்குள்
என்று தெரிந்திருந்தால்
அம்மா நான்
தரணியில்
தமிழனாய்
தவழ்ந்திருக்க மாட்டேனே அம்மா?

எல்லோரும் பசியாறி முடிந்த பின்
எஞ்சியிருக்கும்
எச்சங்கள் தான்
என் வயிற்றுக்கு
மிச்சங்களாய்
காரணம் நான் தமிழக்கைதி?

தியாகங்களுக்காக சிறை சென்றார்
எம்முன்னோர்
சில யாகங்களுக்காக
நான் இன்று அக்கினியில்
தள்ளப்பட்டுள்ளேன்!
வேடிக்கை பார்வை வேண்டாம்

விடுதலை வேள்விக்காக
உயிரோடு எரிக்கப்படும்
அகிம்சை அகதி நான்
கவலைப்படேன்!

உதாசீனப் பார்வைகளாலும் – வீண்
உதைகளாலும் ஒடுங்கிப்போகவில்லை
உரமாகி விட்ட மனதோடு
இன்னும் உரக்கச்சொல்வேன்
நான் ஒரு தமிழனென்று!

என்றும் சொல்ல வேண்டாம்
வரலாறு சொல்லட்டும்
சிறை சென்ற தமிழன்
மரணத்தை வென்ற மனிதனென்று!

***சிவலிங்கம் சிவகுமாரன்***

வீ. விஜயபாஸ்கரன்
இல: 134, சுப்பிரமணியம் ரோட்
ஆர்.எஸ். புரம்,
கோயம்பத்தூர்-02.

அன்புடை நண்பருக்கு

வணக்கம். உங்கள் கடிதம் கிடைத்தது. நன்றி. உட்கார்ந்து கடிதமெழுத என் உடல்நிலை இடம் கொடுக்காததால் பதில் எழுத தாமதமாகிவிட்டது. மன்னிக்கவும். சரஸ்வதி களஞ்சியம் தொகுப்பிலிருந்து தேவையான கவிதைகளை தங்கள் வடம் கலை இலக்கிய இதழில் வெளியிட எனக்கு ஆட்சேபனை இல்லை. தாராளமாக எடுத்து பிரசுரியுங்கள். வெளிவரும் இதழ்களை எனக்கும் அனுப்பிவைக்கவும். தங்கள் இலக்கிய ஆர்வத்திற்கும், புதிய முயற்சிக்கும் எம் பாராட்டுக்கள். உங்கள் பணி சிறக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புள்ள
வ. விஜயபாஸ்கரன்.

---

## வாழிட சொகுசு

சமைக்கும் அறை ஒன்று
மக்கள்
படிக்கும் அறை ஒன்று
விருந்து
வழங்கும் அறை ஒன்று
தெய்வ
வழிபாட்டு அறை ஒன்று
பருவ மகள்
அமர்ந்த அறை ஒன்று
நாங்கள்
படுக்கும் அறை ஒன்று
வியப்பெதற்கு? வேண்டாம்.
எம் வீடே ஓரே அறை

***மலைவாசி***

# மறைக்கப்பட்ட சாளரம்

தினந்தோறும்
தேயிலைச் செடிகளின்
சிரங்களை
அலங்கரித்து
அழகு பார்க்கும்
அவளின்
பத்துமாதம்
சுமந்து பெற்ற
குழந்தை
ஆயாவின் அதட்டலில்
அநாதரவாய்
அலறுகிறது கேட்பாரற்று!

ஒற்றைச் சில்லு
பூ ட்டிய வண்டியாய்
ஓட மறுக்கும்
வாழ்க்கையில்
அடிக்கடி
விலைவாசிப் பொதிகள்
அனுமதியின்றியே
ஏற்றப்படுகின்றன

நாட்டின் பொருளாதாரத்திற்கு
கைகொடுத்தவள்
வீட்டின் விடிவை
கைநழுவ விட்டு
வீற்றிருக்கிறாள்

தேசத்தின் அபிவிருத்தி
அட்டைகளாய்
அவளின் அன்றாட
வளர்ச்சியை
சுரண்டல் பற்களால்
சுவைத்து உறிஞ்சுகின்றன

இவளுக்கு
தாகங்களை
தண்ணீரே
ஊட்டி விடுகிறது
இவளின்
சுவாசத்தை
காற்றே
சுவாசித்து விடுகிறது

இந்த
சபிக்கப்பட்ட ராணியின்
சாம்ராஜ்யத்திற்கு வரும்
இளவேனில் கூட
மதில்களின் கோரப்பற்களால்
குதறப்பட்டு தழுவுகிறது

**சி. சார்ல்ஸ்**
**லிந்துல**

# கூட்டு வாழ்க்கை

குளிர் குத்தும் விடிகாலை
விரைந்து - குளிர் பரவும்
இரவில் நுழைவேன் வீடு

பஸ்ஸிற்குள் சுயத்திற்கான போர்....
பசிஇ தாகம்இ களைப்புஇ கவலை
இடையில் இவைகளின்
ஆட்டம்....

களைப்பில் படுப்பதா?
கவலை துறந்து படிப்பதா?..
அனைத்தும் உடைத்து
புத்தகம் விரிக்கையில்
அடுத்த வீட்டு புதிய சீடி
அலறும்....

நாளைய பரீட்சை எனை
பயமுறுத்தும்
இதுவிடுத்து - செறிவுமிகு
"தண்ணீர்" சண்டை
ஊர்த் திருவிழா.....
திருமணங்கள்.....
குடும்பச் சண்டை, குத்துஇ வெட்டு
என் வீட்டு "கொலவாரிகள்"

விடிகாலை எழுவோமென
சேவலுக்கு முன் விழித்தாலும்
அதற்கு முன் நாறும்
என் முற்றத்து குழாயில்
தண்ணீர்ப் போர்

காயாத சீருடை எனைச் சுடும்
பரீட்சை எனை பயமுறுத்தும்
அழுகையோடு பள்ளிநோக்கும்
பாதங்கள்
லயமுறையின் கூட்டுவாழ்க்கை
இலக்கு நோக்கிய இளையவர்க்கு
நரகம்......

பொன்னையா சுதர்சினி
காவத்தை த.ம.வி

---

வடம் வெளிவர உதவி நல்கியவர்கள்
அப்புத்தளை து. பிரபாஹர்
ரம்பொடை சந்திரகுமார் (அசிரியர்)
காவத்தை திரு. மணிமாறன் (நேசன் வீடியோ)

## சாரல் நாடன்



அறுபதுகளில் மலையகத்தில் எழுச்சியுற்ற எழுத்தாளர்களுள் ஒருவர் சிறந்த ஆய்வாளர்

...வி சில சிந்தனைகள், தேச பக்தன் கோ. நடேசய்யர், மலையகத்தமிழர் ...லாறு, மலையக வாய்மொழி இலக்கியம். மலையகம் வளர்த்த தமிழ் ...ான்ற மிகச் சிறந்த ஆய்வு நூல்களை தந்தவர்.

...முறை மத்தியமாகாண சாகித்திய விருதுகளையும் 'தேசபக்தன் ...நடேசய்யர்' நூலிற்காக அரச தேசிய சாகித்திய விருதினையும், இலங்கை அரசினால் ...க்கியவித்தகர் என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர்.

...ட்டகலை இலக்கியவட்டம், மலையக கலை இலக்கியப்பேரவை என்பவற்றின் தலைவர்

...ல் வெளியீட்டகத்தின் உரிமையாளர்

...லையகம் பெருமை கொள்ளவேண்டிய, இவ்வருடம் மணிவிழா காணும் இவரை முதலாவது ...லேயே இணைத்துக் கொள்வதில் வடம் பெருமை கொள்கின்றது.

**கேள்வி:** இன்று நீங்கள் ஆய்வுத்துறையில் முற்றுமுழுதாக ஈடுபட்டிருந்தாலும் கவிதையூடாகவே இலக்கிய உலகிற்கு அறிமுகமானீர்கள் அன்றைய கவிதைகளில் பாடுபொருள்கள் எவையாக இருந்தன?

**பதில்:** ஆய்வுத்துறையில் நான் ஈடுபட்டது ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுக்குப்பிறகே. என் எழுத்துலக ஆரம்பம் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளிலே ஆரம்பிக்கப்பட்டது. அக்காலக்கட்டத்தில் நாங்கள் பாடுபொருள்கள் இவையிவைதாம் என்று வகுத்துக் கொண்டு கவிதை பாடவில்லை. ஆனால் "தேயிலையே நீ தூது செல்வாய்" என்று தூதுக்கவிதை பாடுபவர்கள் மலையகத்தில் இருந்திருக்கின்றார்கள்.

**கேள்வி:** அன்று எழுதிக்கொண்டிருந்த கவிஞர்களில் நீங்கள் எப்போதும் நினைதது நெகிழும் கவிதைகளை தந்தவர்கள் என யாரைக் கருதுகின்றீர்கள்?

**பதில்:** காலம் கடந்த பின்னரும், காலன் கவர்ந்த பின்னரும் என்னிதயத்தை நெகிழவைக்கும் கவிதைகளை எழுதியவர்களென இன்று எண்ணி மகிழும் நிலையிலிருப்பவர்கள் பி.ஆர். பெரியசாமியும், தென்னவனும் தான்.

**கேள்வி:** கவிதை என்று எதை கூறலாம்?

**பதில்:** ஒரு முறை படித்ததும், படித்தவரிகளும், வரிகளமைந்த சொற்களும், நினைவிற் ஆழமாக பதிந்து,பசுமரத்தாணிபோல் பதிகின்றதா? அதுதான் கவிதை

**கேள்வி:** ஏனைய இலக்கிய வடிவங்களை விட புதிய எழுத்தாளர்கள் கவிதைகளையே தெரிவு செய்வதற்கு என்ன காரணம் என உணர்கிறீர்கள்?

**பதில்:** புதிய எழுத்தாளர்கள் அதிகமாக கவிதை மூலம் தம் பிரவேசத்தை ஏற்படுத்தி கொள்ளலாம் என்று நினைப்பதற்கு நாலுவரிகள் நன்றாக அமைந்த விட்டால் அது கவிதையாகி விடுகின்றது என்ற நம் மக்களின் நம்பிக்கைதான் காரணம். சிறு கதை, கட்டுரை,நாவல் போன்ற இலக்கிய முயற்சிகள் அத்தனை சுருக்கமாக அமையமுடிவதில்லை.

**கேள்வி:** மலையக இலக்கிய பரபபில் கவிதைகள் சமூக மாற்றத்திற்கான சாதிபபுக்கள எதையாவது நிகழ்ததியிருக்கின்றனவா?

**பதில்:** உலகில் ஏற்படுகிற மாற்றங்கலெல்லாம் நிகழ்நததைப் போலத்தான் மலையகத்திலும் நிகழ்ந்துள்ளன அதன் அடி நாதமாகக கவிதைஉணர்வு இருந்திருப்பதை காணமுடிகிறது. ஈழத்தின் நவீன கவிதையின் தோற்றம் நாற்பதுகளில் தொடக்கமென்று இது நாள்வரை கூறி வந்தத தவறு என்பதை விமர்சகர்கள் ஒத்துக்கொள்ளகிறார்கள்.அது முப்பதுகளிலேயே தோன்றிவிட்டது என்பதற்கு நடேசய்யரும் - மீனாட்சியம்மையும், அவர்களின் கவிதைகளும் சாட்சியமாகின்றன. பூண்டுலோயா-தர்மு, தென்னவன், மல்லிகை சி.குமார் ஆகியோரின் கவிதைகள் மலைத்தம்பியின் பல கவிதைகள் இந்த விதத்தில் ஆய்வு செய்யப்படத்தக்கவை

**கேள்வி:** மலையக கவிஞர்கள் தேசிய ரீதியிலான விருதுகளை பெரும் வகையிலான சிருஷ்டிகளை தரவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே?

**பதில்:** தமது சிருஷ்டிகளை தனிநூல்களாகத் தராதஅவர்களின் படைப்பாற்றல் தேசிய ரீதியில்ான விருதுகளைப் பெறுவதற்கு தவறிவிடுகின்றன என்பது நிதர்சனம். ஆங்கில மொழிமாற்றம் பெற்றமையால் நோபல் பரிசு தாகூரை வந்தடைந்தது. அப்படி ஒரு வாய்ப்பு தமிழுக்கில்லை என்பதை சுப்ரமணிய பாரதியார் காலத்திலேயே நாம் கண்டுள்ளபோது இன்று நிலவுகிற நிலைமையைக் கூறி அங்கலாய்ப்பதில் அர்த்தமில்லை. நூல்கள் வெளிவரும் வழிவகைகளை நாம் கண்டுபிடித்து செயல்பட்டே ஆக வேண்டும்

**கேள்வி:** ஞானம் இதழ் அண்மையில் "மலையகத்தின் இலக்கிய எதிர்காலம் இருண்மைமிக்கதாய் உள்ளது" எனக் கூறியிருந்து இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

**பதில்:** ஞானம் இதழ் கடந்த ஐந்தாண்டுகளாக வெளிவருகின்றது. இங்குள்ள நிலைமையை அவதானித்துதான் அது தலையங்கம் எழுதியுள்ளது. அது குறித்து நம்மக்கள் ஆத்திரப்படுகிறார்கள் என்றால் நல்லதுதானே ஆத்திரம் செயலாக உருவெடுக்கவேண்டும்.

**கேள்வி:** நம்பிக்கைத் தரும் மலையக படைப்பாளிகள் இன்று எம்மிடையே உள்ளனர் எனக் கருதுகிறீர்களா?

**பதில்:** இங்கொன்றும் அங்கொன்றுமாக தெரிகிற 'மின்மினி'களின் வெளிச்சம் இருண்ட மலையகத்தின்பால் நம்பிக்கை இழக்காமல் இருக்கச் செய்கின்றது. இந்த 'மின்மினி' வெளிச்சங்கள் மின்சார வெளிச்சத்தில் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுகின்றன.

**கேள்வி:** இளைய படைப்பாளிகளுக்கு தங்கள் கூறும் அறிவுரை என்னவாக இருக்கிறது?

**பதில்:** நிறைய வாசியுங்கள். நிறை அவதானியுங்கள். நிறைய எழுதுங்கள். வாசித்ததை எழுதாதீர்கள். யோசித்து எழுதுங்கள். உங்களிடம் மலையகம் நிறைய எதிர்பார்க்கிறது.

**1**

**அந்த**
**சின்னப்பறவையின்**
**கால் உதைப்பில்**
**அதிரும் என் மனத்தை**
**கமராவுக்குள்**
**அடக்கி விடுவதான என்**
**பிரயத்தனம்**
**இதுவரை பலிக்காமல் போயிற்று!**

**2**

காயங்களுடன்
கொண்டு வந்த
சமாதானக் கொடியை
மடக்கி
நீட்டிப் பிடித்தனர்....
துப்பாக்கியாயிற்று.

**3**

பொறியில் எலி
வதைபடுகிறது
இறக்கவில்லை...
ஒன்றில்
சாகும் வரை காத்திருக்கவேண்டும்
பொறியைப் பிரித்தெடுக்க
அல்லது சாகடிக்க வேண்டும்
தைரியம் எதில் உண்டு?
பெரும் பொறியில் பிடிபட்டு
தன்
சாவைத் தான் பார்க்க
தைரியம் யார்க்குண்டு.

**முல்லை அமுதன்**

அவள் உழைத்த காசில்
தினம் குடித்து விட்டு வந்து
அவளை அணைக்கும் கணவனை
பத்தினிமார் வரிசையில் இடமின்றி
போகுமோ என நிதம்
பொறுத்துக் கொள்வாள்.

**கனிமொழி**

**சொற்களை ஒன்றுடன் ஒன்று சேர்ப்பதிலும், அவற்றிடையே மண்டிக் கிடக்கும் உயிராற்றலை வெளிக்கொணர்வதிலுமே கவிஞனின் தனிச்சிறப்பு காணப்படுகிறது.**

# வரம்

சம்பளத்துக்கு வேலை உண்டா?
கொடுங்கள்
வெறும் விரல்களால் நெருப்பை அள்ள
வேண்டும் என்றாலும் பரவாயில்லை
ஏனென்றால் தற்போது நான்
வெந்துக் கொண்டிருக்கின்றேன்
நான் மட்டும் வெந்தால் பரவாயில்லை
என நான் சொன்னால்
பக்கத்திலிருக்கும் பத்தினி கூட அழுகின்றாள்
இணைந்து வேகுவது அவள் தானே!
வேகும் நெருப்பிற்கு விறகு இடுகின்றான்
என் மகன் அதற்குத் தான் நான்
கேட்கின்றேன்
கூலிக்கு ஓரு வேலை வறுமையின்
பிடி இனியும் ஓழியுமா என பார்க்க

**A. உம்முல் கைர்**
**காவத்தை த.ம.வி**

---

**01**

ஆயிரம் குடங்கள்
பால் குடித்த பின்னும
பசி தீராத அம்மன் எப்படி
பட்டினியில் அழும் குழந்தைக்கு
பாலூட்ட வருவாள்?

எறும்பைக் கொன்றபின்
உணர்கிறேன்
என் மூன்று பிள்ளைகளும்
பார்த்துக் கொண்டிருந்ததை

**காட்டோ சூசான்**

**02**

அஸ்தினாபுரத்து அரசவையில்
இந்திரபிரஸ்த்த மகாராணிக்கு
மாயக்கண்ணன் ஈந்தவை
ஆர்பாட்டியில் திருடிய
ஏழைகளின் சேலைகளா?

**வே.தினகரன்**

மனைவறை
மெதுவாக பெருக்குகிறாள்
முதிர்கன்னி

**அறிவுமதி**

---

மனிதனையும் சமுதாயத்தையும் பிரிந்து வாழ்க்கையும் இல்லை. இலக்கியமும் இல்லை.

# நிலைக்கட்டும் சமாதானம்

சமாதானமே!
தள்ளி ஏன் நிற்கிறாய்
சாகிறவர் எம்மின மக்கள்
சாந்தி கிட்ட ஆவன செய்

இடம் மாறிய சொந்தங்கள்
இணைந்து இன்பம் கண்டிடவே
இனியேனும் இன்மொழியால்
நல் வாழ்த்து கூறிவிடு

பிறர் தந்த சன்மானத்தால்
தன் மானம் காத்து வீழும்
நிலை இனியும் வேண்டாம் - களிப்புடன்
வாழ கருணை கொள் எம்மீது

மலர்ந்திட்ட சமாதானம்
மணம் பரப்பி நிலைக்கட்டும்
மானிடர் எம் வாழ்வினிலே
மாண்மியம் இனி ஒளிரட்டும்

குட்டித் தீவில் குருதிக்கறை
இனிமேல் படர்ந்திட வேண்டாம்
நீதி இங்கு வளரட்டும்!
நிம்மதி நாட்டில் ஓங்கட்டும்!

**R. பிரேமா**
**காவத்தை**

---

# பேனைக்கு பேராசை

அன்புடை
புத்தகக் கடைக்காரருக்கு,
எனது புத்தகங்களுக்கு
பணம் தரவேண்டாம்
நூல் வெளியீட்டுக்கு
அடகு வைத்த என் மனைவியின்
தாலி ஏலத்தில் போய்விட்டது
வண்ணப்பட இதழ்களே
வாங்கி விற்க! இலாபம் அதிகம்
ஏழை எழுத்தாளனுக்கு
நூலிடும் ஆவல்
எத்தனை பேராசை.

**யதார்த்தன்**

# மனரீதியான தடை

இஸ்லாம் கருத்தியல் சம்பந்தமான சில தேடல்களை இந்த தொகுப்பில் சொல்லியிருக்கிறேன்.``இத்தனை இத்தனை ஆண் நபிகளுக்கு மத்தியிலும் ஏன் வாப்பா இல்லை.. பெண் நபி"என்று எனது மெல்லிய குரலில் எழுதிய கவிதைக்குக் கடும் எதிர்ப்பு.

"ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு தூதரை அனுப்பி இருக்கின்றேன்" என்று திருக்குரானில் ஒரு வசனம் வரும் அப்படி அனுப்பப்பட்ட ஒரு லட்சத்து 24 ஆயிரம் நபிமார்களில் பெண் நபிகளும் இருந்திருக்கலாமோ? என்ற கேள்வி இல்லாமலில்லை இஸ்லாத்திற்குள் பெண்ணியம், ஜனநாயகம் சார்ந்த கருத்துக்களை விரிவுப்படுத்துவதற்கான முயற்சி என்று இதைப் பார்க்கலாம் "இவையெல்லாம் இஸ்லாமியத்திற்கு எதிரானதென்று முத்திரை குத்துகின்றனர்"

அதுபோல " இறைவன் ஆணுமில்லை,பெண்ணுமில்லை/அவனை யாரும் பெறவுமில்லை/ ஆண் தன்மையும் பெண்தன்மையும் அற்ற/ என் அல்லாவை எப்படி நான் அழைப்பேன்/ என் தமிழில்?" என்று ஒரு கவிதை எழுதியிருந்தேன் இதுவும் பிரச்சனைக்குறிய கவிதையாகிவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாம் சமூகத்திலுள்ள பெரிய படைப்பாளிகள் மௌனமாக இருக்கின்றார்கள் இது ஒரு துக்ககரமான விடயம் அதில் எனக்க வருத்தம்தான். அது தவிர இளம் இஸ்லாமிய படைப்பாளிகள் எனது குரலில் இருக்கின்ற நியாயத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றார்கள். இஸ்லாமிய சமூகத்தின் சார்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார்கள் என்று தெரியவில்லை ஆனால் எழுதுவதற்கு மனரீதியான தடை ஒன்று உருவாகியிருக்கின்றது. இதையும் மீறி எழுத வேண்டும் எழுதுவேன் என்ற நம்பிக்கை இருக்கின்றது. (மைலாஞ்சி கவிதை தொகுப்பிற்கு எழுந்த எதிர்ப்புகள் குறித்து கவிஞர் ஹெச். ஜி. ரசூல்)

---

# குமுறல்கள்

இருத்தலுக்கான வாசலை
திறந்து விட்டு யுத்த முறுகல்களை
அவிழ்த்துவிடும் அசிங்கங்கள்
அரங்கேறுகின்றன.
புலம்பெயர் வாழ்க்கை
புலர்வுகளை தரவில்லை
புண்ணியங்கள் தேட
புனிதத் தளங்கள் புதிதாய் இல்லை

புதைக்குழிகளின் வாய்பிளப்புகளை
மனித துண்டங்களால் நிரப்பும்
யுக்தியினை மாற்றி புதைக்குழிகளில்
துடிக்கும் மானுடத்தை மீட்டெடுத்து
கௌரவம் சூட்டுவோம்.

யுத்த சலனங்களும்
சவப்பெட்டிகோலங்களும்
காலங்களின் வெளிகளில்
எதிரொலிக்கும்
நிலைமாற்றவோம்.

காதலுக்கு மட்டுமல்ல
எங்கள் வேதனைகளுக்கும்
காத்திருப்புக்கள்
சுகம்தரும் மருந்துதரும்.
நம்பிக்கைகள் தான்
எங்கள் மாளிகைகள்
எங்கள் மாளிகைகள்
இவை நீட நம்பிக்கைகளின்
கருவுடைத்து பிறந்த மாடங்கள்.

மாரிமுத்து சிவக்குமார்,
ஹட்டன்.

# மீட்சிக்கான பிரயத்தனங்கள்

நீள் தொலைவிலிருப்பவளே !
மிகத்தாமதமாய்......
இம்மடல் வரைகிறேன்
பசுமை விரிந்தடர்ந்திட்ட
நம் காதலை எழுதுகையில்
என்னிதயம் கனத்து வலிக்கிறது
திரும்பும் திசையெங்கும்
நாறியவாறு...

அடக்கு முறையின் சீழ்மைகள்
நிறைமாத கருவேந்தி
நிரைபிடிக்க மலையேறும் தாய்மைகள்
விசுவாசமிகையுற
உழைத்தக் கருத்தோள்கள்
இச்சூரிய பொழுதில் இரையாகுமவலம்
காய்ப்பேறிய கரங்களின்
உழைப்புச் சுரண்டுகை
கட்சிக் கொடியாகி பறக்கிறதெங்கும்

என்னூரெங்கும் மாட்சி மிகையுறு
மதுக்கோவில்கள்
அறிவுச்செழித்தவனும் கியுவில் நிற்கிறான்
பனிக்கத்தோடு மந்திரி எச்சிலுக்காய்
இந் நரகத் துயர்கண்டு
இச்செந்தேகம் சிலிர்த்து
பற்களிறுகி சப்தமிட
இக்குரூர பசுமை அழிக்க
இன்றென் பேனை குருதி வடிக்கும்
நாளையோ...
இந்த ரத்தமுமாத்மமும்
வடிந்து மடியலாம்

அன்படர்ந்தவளே !
நம் நேசத்தைப்போல்
மெய்மையுறு என் மனிதம்
இவ்வலி சுமந்து கரைகிறது
மீளுகைக்கான பிரயத்தனங்களோடு

**காவத்தையூர்**
**பா.மகேந்திரன்**

---

என்னோடு
பேசும் காற்று
கோடைத்து மரத்தைச்
சுடக்கவும் செய்கிறது.

**சல்மா**

# ரயில் அனுபவம்

மரத்தில் கவிந்த
இருளை
களைக்க முயற்சிக்கும்
மின்மினியாய்
என் மனசு

எருமையின் முதுகில்
எண்ணி எண்ணி
உண்ணிப் பொறுக்கும்
மைனாவாய் சிலநேரம்.

காண்கிறேன்
அண்மிக்கத் தோன்றாத
அதிநாகரீகவாசிகள்
புத்தக வயதில்
புது சிசுவை
அணைத்து நிற்கும்
குழந்தைத்தாய்

தனக்காய் இல்லை.
பிறருக்காய் மூட்டை சுமக்கும்
பெரியவர்.

காற்றெம்மை
கவனிக்கவில்லை.
வாடிய பயிராய்
என்தோழி

கற்பனைப் பையுடன்
தட்டேந்திய கவிஞன்.
கவி புனைய
தோன்றவில்லை.
என் பேனை
மூடிக்கொண்டது
முகத்தை

நகரும் கணங்களில்
நகரும் காட்சிகள்
இறங்காத
இரயில் பயணியாய்
வாழ்க்கை.

**ஆர்த்தி**
**கொட்டகலை**

---

**ஒரு கவிதையைப் படிக்கும் போது எமது ஏற்புத்திறனானது எமது பயிற்சியையும் பொறுத்திருக்கிறது.**

# உறைக்காத உணர்வுகள்

வடிந்துமுடிய முனையும்
வரலாற்றுச் சோகங்களை
இறுகப்பற்றி பிடித்தபடி தொடர்கிறது
எங்கள் இருள்வழிப்பயணம்.

தேக்காட்டு மாந்தர் – எங்கள்
துயர்தனை போக்காட்டும் போர்வையுடன்
தலைதூக்கும் தலைமைகள்
சந்தாப்பன சேகரிப்பின்போது மட்டும்
முந்திக்கொண்டு.
செருக்களம் செல்லாத சுந்தரப்பாண்டியர்கள்,
குடைபிடிக்கக் கூலிகள்,
எடுபிடிக்கு சில ஏவலாளிகளென
நந்தவன நர்த்தனங்களுடன்
நகர்கின்றன பொழுதுகள்

எதனையும் மீட்டதாக தெரியவில்லை!

சிங்கத்திற்கு வால்பிடித்த நிலை
மலையேறிவிட்டதாயெண்ணி மகிழ்ந்தோம்
அங்கே சடுதியாய் அரங்கேறியது
நாற்காலியுடன் கூடிய நாடகம்!

கனமற்ற காசுக்கு
கொள்கைகளை விற்றுவிட்டு
காற்றுள்ள பந்தாய் மீண்டும் மீண்டும்
சிங்கத்தினதும், நாற்காலியினதும்
காலடிகளில் தஞ்சம்
ஓங்கி ஓங்கி
உதைப்பட்ட பின்னும்
உறைக்கவில்லை எங்களுக்கு.

ஹப்புத்தளையூர்
பிரபாஹர்

---

**நம்முடைய உண்மையான தேசிய நீரோட்டத்தை இலக்கியங்களில்தான் காணமுடியும். அந்த நீரோட்டத்தின் நதிமூலம் ஒன்றல்ல, பல.**

# வீழ்த்தும் நுட்பம்

வெடிச் சிரிப்புக்களோடு
அரங்கேறும் விருந்துகளில்
சாராயச் செறிவுச் சோதனை
எங்கள் சட்டைகளைப்
பற்ற வைத்தலுடன்
ஆரம்பமாகின.

கும்மிருள் வாழ்வுக்குள்
அவர்கள் கும்மாளங்கள்
கன்னம் கிள்ளுதலும்
காது முறுக்குதலும்
இமைப்பிடித்திழுத்தலும்
எஞ்சிய எங்கள் கோவணமுறுவி
கம்பளம் விரிப்பதும்
அவர்தம் வீர விளையாட்டு

எங்கள்
அம்மணங்களின் வேதனைகளை
நிர்வாணமாக்கி ரசித்தல் சுகமவர்க்கு
கண்ணாடிக் கிண்ணங்கள்
அட்டை குடிக்கும்
இரத்தத்தை ஏளனம் செய்து
உரசிக் கொள்கின்றன.

எம் கண்ணீர் தடாகத்தில்
மூலிகைக் குளியல்
வியர்வைச் சூட்டில்
சூரியக் குளியல்.

நாங்கள்
பருகப்படுவது அறிகிறோம்
என்ன செய்ய
ஒன்று சேர்ந்து நிமிர்த்தியவர்
ஒன்று சேராமல்
வீழ்த்துவது எப்படி?

**வேதி**

---

கற்பனையின் வழிவரும் உவமை, உருவகம், குறியீடு, படிமம் போன்ற அம்சங்களும் தகுந்த அளவில் இடம் பெறுவதே கவிதைக்கு நன்று. மிகையான கற்பனை வெறும் புளுகுப் பந்தலாகி, படிப்பவர்க்கு வெறுப்பை ஏற்படுத்தும்.

# வைதா சமத்சாய்

பழைமைவாத கோபுரங்களில்
படிந்திருந்த காக்கைச்சங்கள் கழுவ
தனித்து கோபுரமேறியவள்

அதிகவச ஆடை போர்த்தி
அடக்குகைகளில் புளுங்கிய
ஆப்கானிய அணங்குகளிலிருந்து
கிளர்ந்தெழுந்த நெருப்பு.

அவளின் ஆடைகளைவுக்கு
ஆபாசமுலாம் பூசுதல் கொடிது
என்ன கொடுத்தோம்
ஆடைவிலங்குகளைத் தவிர?
நம் நீள்வரலாற்று
நசுக்குதலுக்கு தேகம் தந்தவர்க்காக
நிமிர்ந்தாள், நாளைய
மானத்தை காக்க
இன்று ஆடை களைந்தாள்.

உலகம் உற்றுப் பார்த்தபோது
உண்மை உரைந்தாள்
அவலங்களுக்கெதிராய் நிமிர்ந்த
தஸ்லிமாவின் அடையாளமழித்தோம் அவள்
பெண்புரட்சியின் விலாசமானாள்
இன்று

போர்த்தி, போர்த்தி வைத்த முயல்
மேடையில் ஆடுகிறது
நாம் ஆக்கிய பாதாள
சகதி முகாம்களில் திணறும்
பெண்டிரை உலக விழிகளிடம்
விரித்து வைக்க தன்னைக் காட்டினாள்
நமை எதிர்த்து, நாம் ஏற்காத
அழகிப்போட்டியை
ஆயுதமாக்கினாள்.
அவளது கலகத்திற்கான நியாயமறுப்பால்
பண்பாட்டின் களங்கமாய் அவள்.
நாம் தெளிந்திருக்கிறோமா?
ஆடை நீக்கல் - கிராமத்தின் போர்க்குரல்
[illegible]வின் போராடலை
புரி[illegible] கொள்வோம்

நம் கண்களில் அம்மணம்
பெண்ணிய ஆன்மீகத்தில்
புனித நிர்வாணம்

தற்கொலைப் போராளியாய்
நெஞ்சுக்குள் நெருப்பேந்தி
அழகி மேடையில் பாதியுடை துறந்து
பல்லைக் கடித்து நடந்த
பெண்மையின் தாகமறிவோம்

நல்லதொரு கோட்பாட்டைக்
காப்பாற்றும் கடமை எனக்குமுளதால்
கையுயர்த்துகிறேன்.
அவர்களை கைவீச விடுங்கள்

பூட்டி பூட்டி வைத்த உணர்வுகள்
எப்போதும்
வெளியிலலைந்ததை
விளங்காமலில்லையே நாம்!

**மிஸ்வாக்**

✱ வைதா சமஸ்தாய் - 2003ல் பிலிப்பைன்ஸில் நடந்த உலக அழகிப்போட்டியில் 'இலட்சியத்திற்கான அழகி' விருது பெற்ற ஆப்கானிய அழகி.

---

# பிரிவின் வெளியில்

வில்லிலிருந்து
புறப்பட்ட அம்பென
சட்டென நிகழ்ந்துவிடவில்லைதான்
நாணிழுத்துக் கட்டிய
உன் விரல்களின்
வன்மம் குறித்து
நான் அறிந்தே இருந்தேன்
எனது ஆடைகளுக்குள்
ஒளித்து வைத்திருந்த
கவசங்கள் பற்றி
நீயறிய வாய்ப்பில்லை
நிராகரிப்புகளும்
மன்றாடுதல்களும்
வெறும் மௌனங்களால் மட்டுமே
பரிமாறிக் கொள்ளப்பட
கூட்டடையும் பறவையின்
ஓய்வுக்கான ஒத்திகையாய்
மிக மெலிதாக
கேட்கத் துவங்கி இருக்கிறது
நம் சிநேகம்
முறியும் சப்தம்

**கே.ஸ்டாலின்**

# கவிஞர்களை நேசியுங்கள்

கவிதை யொன்றெழுத
    காகிதம் தேடினேன்
பாவியென் அதிஷ்டம்
    பல நாள்கள் கிழிசல்கள்!

பட்டது கருத்தில்
    பல் கோடிக் கற்பனைகள்
எட்டடிக் கவிதையாய்
    ஏராளம் படைத்திருப்பேன்!

பணத்தைத் தேடினேன்
    பேனா தாள் வாங்குவதற்கு
வீணாய் போனவள் பெண்டாட்டி
    வழிச்சி எடுத்துவிட்டாள்!

காசுதான் வந்திடுமா
    கவிதை எழுதிவிட்டால்
வாசியில்லா வேலையது
    வம்பெதற்கு விட்டுவிட்டேன்!

பேர்பெற்ற கவிஞனாகி
    புகழ் விருது பெற்றிடினும்
யார் தனக்கு உதவிடுவார்
    இலக்கியத்தாலென்ன பயன்!

எத்தனையோ மேடைதனில்
    இலக்கியத்தைப் போற்றிடுவார்
பத்துப் பேர் உதவி கூட
    பண்ணார்க்குயேன் கவிதை!

கவிதையென்ன கழிநீரோ
    காசில்லாமற் படைப்பதற்கு
கவி விரும்பும் வாசகரே
    கவிஞர்களை நேசியுங்கள்!

மூதூர் "கலைமேகம்"

---

**சுவை நிரம்பிய கவிதைகள் உவமை நிரம்பியவையாகவும் இருக்கும் என்பது ஓர் இலகுபடுத்திய கூற்று. அது முழு உண்மையின் ஒரு பகுதியே ஆகும்.**

**இ.முருகையன்**

# இமைப் பொழுதும் அயராமல்.....

மழை சிறகு நா
இருள் கிழித்துப்பறந்து
ஓடுமைக் குடைந்து
ஒளிப்பாழும் சூழ்ந்து
உயிர்நீத்த உற்றார்கள்
உள்ளம் நோவுது.
சிதைந்த அலைகளுக்குள்
போராடிய அவசரங்கள்
அற்பாயுளில் சிதைந்தன.

வாழும் படபடக்கும்
நிமிடங்களைக் கலைக்க மனமின்றி
விழி முந்தி நிற்கையிலே
பறந்துபறந்து
வீழ்ந்தன இறகுகள் சில
ஒன்றாய் இரண்டாய் மூன்றாய்...

அவை
உதிருகின்ற போதிலும்
பறக்கும் ஆவல்
பரிதவித்துச் சுழல்கிறது.
நான்காவது சிறகும்
வீழ்ந்த பின்னும்
வெற்றுடம்புகள் விரைந்து
ஊர்ந்தன - தரையில்.
இறுதி நொடியையும்
வாழ்ந்து விடத்துடிக்கும்
விருப்புக் குறையாமல்
அற்புதம்!

ஒரு நாள் கூட
முழுமையாய் வாழாத
ஈசல் மரணங்களை
வெறுமையுடன்
வேடிக்கை பார்த்த
நான் மட்டும்
கனத்த மனதுடன்
அசைவே இல்லாமல்
உதிர்ந்து போன இறகுகளையும்
உயிர்நீத்த உடல்களையும்
கூட்டித்தள்ளிக் கொண்டிருந்தேன்
நீண்ட ஆயுளுக்கான
ஆசீர்வாதங்களுடன்!

சற்றைக்கெல்லாம்
மீண்டும் பரபரப்பு
மின்னக் குமிழில்
கிடைத்த போதினில்
விரைந்து சேகரிக்கும்

நாளைக்கான கரிசலனையில்
எறும்புத் திருவிழா
களை கட்டியது
உடல்கள் பத்திரமாய்
ஊர்வலம் சென்றன
பக்கமெல்லாம் பக்தர் சூழ...

சிறகுகளில் சறுக்கல் விளையாட்டு

இப்போதும்....
சாவகாசமாய் - நான்
கைகட்டி ரசித்தேன்
கைக்குள்
அதிஸ்ட லாபச் சீட்டு !

ஆ.புனிதகலா
வட்டவளை.

---

## புறப்படு

அகிம்சை உதிரத்தில்
அடிமை சாசனம்
எழுதும் அதிகார
வர்க்கத்தின் முன்
சாத்வீகம் எதற்கு!

நமதின் சுயத்தை
கொன்று தின்று
ஏப்பமிடும் ஓநாய்களிடம்
மண்டியிட்டு- எம்மை
அடக்கி ஆளுகை புரிவோர்
கால்களை நக்கி பிழைக்கும்
நம் நாயகர்களை
விசுவாசித்து வீழ்ந்து
சுயமிழத்தல் தகுமோ?

சுயமிழந்து சவம் சுமந்து
வாழ்தலை விட
உயிரிழத்தல் மேன்மையன்றோ?
எழுக தோழா!

V.கணேஸ்
காவத்தை

சமூக பார்வையும், விஞ்ஞான நோக்கும் அழகியலோடும், கவித்துவத்தோடும் சங்கமமாகும் போது தான் ஒரு நல்ல கவிதை படைக்கப்படுகிறது.

-ஜீவி

# நாளையத் தெரிவுகள்

உலகை மிரட்டும்
விஞ்ஞான யுகமதில் – ஏனோ
மலை தேசம் மட்டும்
மீட்சியின்றி மிரண்டு போய்
உழைப்பு வளம்தந்து
உரமாகிப்போகும் எம் பாட்டாளியர்
எதிர்ப்பார்ப்பு தந்து ஏமாற்றி
வறுமைக்கு வளமூட்டும் வேலையின்மை
இன ஒடுக்களில் காணாமல் போகும்
சுயமுயற்சிகள்
அடக்குமுறைக்குள் சிக்கிப்போக
பொருத்தமாகிப் போன
எம் சிந்தனைகள்
உரிமைக்காய் உயிர் நீத்த
லட்சுமணன்கள் மறக்கப்பட்டு.....

யதார்த்தம் தொலைத்து
சாக்கடை சிந்தையில் மூழ்கி
உலகமயத்தில் வீக்கமுற்று
தனித்துவம் இழந்து வாழும்
எம் மண்ணின் இளமைகள்
இன்னும் இன்னும் வேர்விட்டு
பசுமை காட்டும் சாதியம்
சாண் ஏற முழம் சறுக்கும்
கல்விப்பாதைகள்,
இவைகள்
நீளும் நாளைய சமுதாயத்தின்
சவக்குழியின் வழிப்பாதைகளா?
இல்லை மாற்றம் கண்டு பயணிக்கும்
புது வழிப்பாதைகளா?
உங்களின் தெரிதலில்
தூரத்தே கிடக்கின்றன
நாளைய பசுமைகள்

காவத்தை
அ. சிற்றம்பலம்

---

**கவிஞர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசினாலும் அவர்களுடைய இதயம் ஒரே மொழியில் பேசுகிறது. அது கண்ணீராலும், புன்னகையாலும் ஆனமொழி எல்லோருக்கும் பொதுமொழி திணிக்கப்படும் மொழி அல்ல சுவாசத்தைப்போல், காதலைப்போல் சுயமாகச் சுரக்கும் மொழி.**

# எதிர்த்து நில்

அவர்கள்
ஒரு பேப்பரையும் பேனையையும்
என் முக்கெதிரே விசுக்கி எறிந்தனர்
என் வீட்டின் திறப்பை
என் கையில் திணித்தனர்

என்னைக் கொண்டு
பேப்பரை மாசுப்படுத்த அவர்கள் விரும்பினர்
பேப்பர் சொன்னது : எதிர்த்து நில்
என்னைக் கொண்டு
பேனையை அவமானப்படுத்த அவர்கள் விரும்பினர்
பேனை சொன்னது: எதிர்த்து நில்

என் வீட்டின் திறப்பு என்னிடம் சொன்னது
உன் சின்னஞ்சிறு வீட்டின்
ஒவ்வொரு கல்லின் பெயராலும்
எதிர்த்து . நில்

சுவரில் ஒரு நட்டு
தறிக்கப்பட்ட ஒரு கையில் இருந்து
சுவரின் குறுக்காக வந்த ஒரு செய்தி
குறிப்பால் உணர்த்தியது: எதிர்த்து நில்

சித்திரவதை அறையின் கூரை மீது
சொட்டு சொட்டாய் விழும்
ஒவ்வொரு மழைத்துளியும் அலறியது :
எதிர்த்து நில்

**மூயீன் பசைசோ - பலஸ்தீனம்**
**தமிழில் - எம்.ஏ. நுஃமான்**



குயில்தோப்பு